# பொதுக்காலம் 32ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறப்பை வெற்றி கொள்ள இறைவனோடு இணைந்து நடப்போம் என்னும் உண்மையை உரைக்க இன்றைய பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு நம்மை அழைக்கிறது.

பிறப்பை மகிழ்வாகக் கருதும் மனதுக்கு இறப்பு என்பது கசக்கும் நிகழ்வாகவே தெரிகிறது. இறப்பு என்பது யதார்த்தமானதுதான். இறைவனோடு இணைந்து இயங்குபவர்கள் உயிருள்ளவர்களே என்பதை மனதிற் கொள்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில், இறப்பையும் இறைவனுக்காக இன்முகத்தோடு ஏற்கும் தாயும் ஏழு சகோதரர்களும் இறைசாட்சியாக மரித்ததை வாசகம் தெளிவுறுத்துகிறது. இவர்கள் தங்கள் உயிரை துறக்க காரணம் இறைவன் இவர்களை உயிர்த்தெழச் செய்வார் என்னும் விசுவாசமே. நாமும் அத்தகைய விசுவாசத்தில் வளருவோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், “இறைவன் இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக வாழ்வோரின் கடவுள்” என்று இறைவனின் வழிநடத்துதலை இயேசு கூறுகிறார். ‘உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே!’ என்றார் இயேசு. இவ்வுலக வாழ்வினைப் போன்று விண்ணக வாழ்வில் உறவுகள் இல்லை என்றும், இறைவனின் மக்கள் என்ற ஒரே ஒரு உறவுதான் என்பதை மனதிற் கொள்வோம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நல்ல ஆயனாம் இறைவா!

எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் இறை இரக்கத்தின் தூதுவர்களாகத் திகழ்ந்து, மக்களை மனமாற்றத்தின் பாதையில் வழிநடத்தி, மீட்பின் பாதையில் சேர்த்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. உடைந்த உள்ளங்களுக்கு அருகிலிருப்பவரே எம் இறைவா!

அன்றாடம் வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள், வேதனை, ஏமாற்றம், இழப்புகள் போன்றவற்றில் மனம் தளராமல், உள்ளங்களுக்கு ஊக்கம் தரவும், திருமண உறவில் நிலைப்படும் யாவரும் நம்பிக்கை, அமைதி, அன்பு கொண்டு வாழவும் வரமருள வேண்டும் என உம்மை மன்றாடுகின்றோம்.

3. நீதியின் வேந்தரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், அலுவலர்கள் நாட்டு மக்களை கஷ்டப்படுத்தும் பணிகளை, வரிகளைச் சுமத்தாமல், இயற்கையோடு இணைந்த பாதையில் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி அமைத்து தரவேண்டும் என உம்மை மன்றாடுகின்றோம்.

4. வரங்களை பொழிபவரே எம் இறைவா!

எம் பகுதியில் பொழியும் மழைக்காக நன்றி இறைவா! மழைநீர் முறையாக பராமரித்து சேமிக்கப்படவும், நீர் நிலைகள் முறையாகப் பேணி விவசாயம் மேம்படவும், குடும்பங்களில் சமாதானம், மகிழ்ச்சி நிறைந்து இருக்கவும், கல்வி, வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உம் அருளால் பெற்று மகிழவும் வேண்டுமென்று உம்மை கெஞ்சி மன்றாடுகின்றோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com